

கோப்புப்படம்

# போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காண இருவழிப்பாதை

கோலாலம்பூர், மே 4-

போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காணும் வண்ணம் ஒருவழி பாதை இருவழி பாதையாக மாற்றம்பெற்றது.

இதனை தொடர்ந்து ஜாலான் சுல்தான் இஸ்மாயில், ஜாலான் ராஜா சூலான் ஆகிய முச்சந்தி பகுதியில் போக்குவரத்து நெரிசலை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர 20 போலீஸ்காரர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர்.

புக்கிட் பிந்தாங் வட்டார பகுதியில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வண்ணம் கோலாலம்பூர் போக்குவரத்து புலனாய்வு மற்றும் அமலாக்க இலாகாவும் கோலாலம்பூர் மாநகர் மன்றமும் இணைந்து கூட்டாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று கோலாலம்பூர் துணைப் போலீஸ் தலைவர் டத்தோ அஸ்ரி அக்மார் அயுப் தெரிவித்தார்.

போக்குவரத்து போலீசார் புக்கிட் பிந்தாங், ஜாலான் சுல்தான் இஸ்மாயில் ஆகிய பகுதிகளில் திரளாக பணியில் ஈடுபட்டனர். வழித்தடத்தில் மாற்றம் என்பதனை இவர்களின் பிரவேசம் சாலையினை பயன்படுத்துவோருக்கு ஓர் அறிகுறியாக இருந்தது என்று டத்தோ அஸ்ரி அக்மால் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கோலாலம்பூர் போக்குவரத்து புலனாய்வு இலாகாவின் தலைவர் ஏசிபி சரிபுடின் முகமது சாலே, டாங்வாங்கி மாவட்ட போலீஸ் தலைவர் நூர் டெல்ஹான் யாஹாயா ஆகியோர் அப்போது உடன் இருந்தனர்.

டத்தோ அஸ்ரி அக்மார் அயூப் மேலும் ஒரு விவரத்தை வெளியிட்டார். பரபரப்பான உச்சகட்ட நேரங்களில் இந்த வழித்தடமானது ஜாலான் கம்போங் பாண்டானிலிருந்து ஜாலான் சுல்தான் இஸ்மாயில் வரை ஒரு வழி பாதையாக விளங்கும். காலை 9 மணிக்கு பிறகு இது இருவழி பாதையாக மாறும். ஒருவழிப்பாதை இருவழிபாதையாக மாற்றம் பெற்று போக்குவரத்து நெரிசலை குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

போக்குவரத்து சுமுகமாக நடைப்பெறுவதை உறுதிப்படுத்துவதற்கும் விபத்துகளை தவிர்க்கும் வண்ணம் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.